ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2124/42 - 2019 මැයි මස 24 වැනි සිකුරාදා - 2019.05.24

*2124/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால், (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2018, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய 2056/41 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின்மூலம் 2018, சனவரி மாதம் 31 ஆந் திகதி தாபிக்கப்பட்ட, "2006, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018, சனவரி மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனி, வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் கேட்டறிங் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி என்பவற்றில் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் முறைகேடுகள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்" தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய 2018, யூலை மாதம் 31 ஆந் திகதி முடிவுறும் ஆறு மாத காலத்தை, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு 2018, யூலை மாதம் 31 ஆந் திகதிய 2082/3 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2018, யூலை மாதம் 31 ஆந் திகதி முதல் ஐந்து மாதங்களுக்கு அதாவது, 2018, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டு, மீண்டும் ஒரு முறை சொல்லப்பட்ட தத்துவங்களுக்கமைய 2018, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2099/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்மூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வரையும் மீண்டுமொரு முறை சொல்லப்பட்ட தத்துவங்களுக்கமைய 2019, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 2109/ 18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்மூலம் 2019, மே மாதம் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டதுடன் மேலும் ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பொறுப்பைக் கருத்திற்கொண்டு மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட தத்துவங்களின்படி 2019, யூன் மாதம் 30 ஆந் திகதிவரை இத்தால் நீடிக்கின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2019, மே 22.*

*06-170*

1A - G 30155 — 387 (2019/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*